www.padippakam.com


# ஈழச்செய்தி

EELAM NEWS

★EPIC

(ESTD IN 1980) POSTBAG 5551, MADRAS-600094. INDIA.

கடிதம் : **23** **20-8-1984**


## மனித நாகரிகம் படுகோலை செய்யப்படுகிறது.

ஈழ மக்களை முற்றாக ஒழித்துக்கட்டும் அழித்தொழிப்பு யுத்தம் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்களால் மிகவும் குரூரமிக்க முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

தென்ஆப்பிரிக்க இனவெறியரசு மூலம தேசிய விடுதலைப் போராட்டங்களின் பயங்கரமான கொலைகாரர்களான ஏகாதிபத்திய அமெரிக்கா நவீன ஆயுதங்களை சிறீலங்கா பாசிஸ்டுக்களுக்கு வழங்கி வருகிறது.

இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தில் பதட்டத்தை ஏற்படுத்தும் விதமான நடவடிக்கைகளை அதிகரித்துவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் சிறீலங்கா துறைமுகத்தில் தனது யுத்தக்கப்பலை நிலை நிறுத்திவைத்துள்ளது.

இலங்கைத்தீவில் வெடித்துக்கிளம்பியுள்ள ஈழப்போராட்ட எழுச்சியை அடக்கி விடுவதற்கு, சிறீலங்காவில் அதிகாரத்தில் உள்ள ஏகாதிபத்திய நலனுடன் உடன்பாடு கொண்ட பிற்போக்கு கும்பலையும் பாதுகாப்பது அமெரிக்காவின் கொள்ளைக்கார விஸ்தரிப்புவாத நோக்கங்களுக்கு உகந்ததாக உள்ளது.

எனவே ''புனிதமான ஜனநாயகக் காவலனாய்'' தன்னை பிரகடனப்படுத்தும் ஏகாதிபத்திய கொலைவெறிக்கும்பல் ஈழத்தில் நிகழும் மனித நாகரீகப்படுகொலைக்கு சூத்திரதாரியாக இருக்கிறது.

இந்தியாவால் சிறீலங்கா மக்களுக்கு ஆபத்து என்ற பூச்சாண்டி காட்டப்படுவதும் தற்செயல் நிகழ்ச்சியல்ல. நன்கு திட்டமிட்டு இந்திய எதிர்ப்பு விஷப்பிரச்சாரம் சிறீலங்காவில் மேற்கொள்ளப்படுகிறது.


ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH : EPIC B. M. Box 1738, LONDON WCI N 3XX


படிப்பகம்

www.padippakam.com



ஈழ விடுதலைக்காகப் போராடும் இயக்கங்கள் தாம் எதிர்த்துப் போராடும் பகைவர்களது பலம், பலவீனம் என்பவற்றை கண்டறிந்து அதற்கேற்ப தம்மைத் தயார்படுத்துவது இன்றைய காலகட்டத்தின் அவசியத் தேவையாகி உள்ளது.

**முன்தயாரிப்புகளும், ஈழமக்களை ஓர் உறுதியான தேசிய யுத்தத்திற்கு பக்குவப்படுத்தும் பணியும் மிக முக்கியமானவை என்பதை மறுப்பது எதிரிக்கு ஈழ மக்களை அழித்தொழிக்க சந்தர்ப்பம் கொடுக்கும் முட்டாள்தனமான நடவடிக்கையாகவே இருக்கமுடியும்.**

எந்தப் போராட்டமும் ஆயுதங்களைக் கொண்டுமட்டும் வெற்றியடைவது கிடையாது என்பதை நவீன ஆயுதங்களைக் கொண்ட தமது எதிரிகளைத் தோற்கடித்த மக்கள் போராட்ட வரலாறுகளிலிருந்து ஈழ விடுதலையில் அக்கறை கொண்டுள்ள இயக்கங்கள் கற்றறிய வேண்டும். ஆயுதங்கள் எதையும் சாதித்துவிடும் என்றால் ஏகாதிபத்தியம் அல்லவா இன்று சர்வதேசத்தையும் தனது மேலாண்மையின் கீழ் மிதித்துக் கொண்டிருக்கும். ஆனால் மக்கள் மீது ஆயுதம் மூலம் தமது அதிகாரத்தை செலுத்தும் பிற்போக்கு அதிகாரத்துவத்திற்கு எதிராக அவசியம் காரணமாக ஆயுதம் ஏந்தும் **மக்கள் தான்** வரலாற்றை படைக்கும் மாபெரும் சக்தி.

இவற்றை உணராது மக்களைப் போராட்டப் பாதையில் ஒன்று திரட்டாது, மேலிருந்து போராட்டத்தை திணிக்கும் வழி முறையை ஈழத்தில் உள்ள சில அதி தீவிர துணிச்சல்வாத இயக்கங்கள் கையாண்டதால் எதிரி தன்னை பலமாக்கவே வழி கிடைத்தது. ஈழ மக்கள் மத்தியில் குழப்பமும், இழப்புகளும் ஏற்பட்டன.

**சரியான புரட்சிகர வழிமுறையற்ற அதி தீவிர சாகசச் செயல்கள் முதலில் எதிரிக்கு திகிலூட்டினாலும் இறுதியில் மக்களையும் பிரமையில் ஆழ்த்தி, அவர்களை பார்வையாளராக்கி விடுகின்றன என்பதை ஈழத்தின் யதார்த்த நிலை நிரூபிக்கின்றது.**

இனிமேலாவது ஈழ விடுதலை இயக்கங்கள் மக்களை இணைத்துக்கொண்ட வெகுஜன ஆயுதப்போராட்டத்தை முன்னெடுப்பதன் வரலாற்றுத் தேவையை உணர்ந்துகொள்ள வேண்டும். மாறாக துணிச்சல்வாத நடவடிக்கைகள் புரட்சியை ஓர் அடி கூட முன்னேற்ற முடியாது என்பதை இரத்தம் சிந்திப்பெற்றுள்ள அனுபவத்தில் இருந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் ஈழத்தில் இருந்து பகைவர்களை முற்றாக துடைத்தழிக்கும் தேசியயுத்தம் தவிர்க்க முடியாதது என்பதால், யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கான வலுமிக்க ஐக்கியத்தை ஈழ விடுதலை இயக்கங்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழ புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** ஆகிய அமைப்புகள் கட்டியமைத்துள்ள ஐக்கிய முன்னணி ஈழத்தின் தேசிய யுத்தத்தின் முன்னெடுத்தலை தீவிரப்படுத்தும் என நம்புகிறோம்.

**இந்த ஐக்கிய முன்னணியில் ஈழ விடுதலை மீது விசுவாசம் கொண்ட அமைப்புக்கள் இணைந்து கொள்வது அடக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஈழ மக்களுக்கு புத்துணர்வை கொடுக்கும். ஈழப் போராட்டம் வேகமுடன் முன் செல்ல உதவும். இதை ஒவ்வொரு இயக்கமும் எண்ணிப்பார்க்க வேண்டும் என ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையம் கேட்டுக் கொள்கிறது.**

**ஈழம் நிமிர்ந்து வாழ்க!**

**சர்வதேசிய முற்போக்கு, ஜனநாயக சக்திகள் ஒன்றுபடுக!**

படிப்பகம்

www.padippakam.com



## அத்துலத் முத(லை)லி அலறுகிறது

யூலை 21 : இஸ்ரேலிய கொலை வெறியர்களை இறக்குமதி செய்தும் ஏகாதிபத்திய அமெரிக்கப் பெருச்சாளிகளுக்கு திருகோணமலைத்தளத்தை உணவாக ஊட்டியும் சிறீலங்காவையும் அப்பாவிச்சிங்கள மக்களையும் தமது நலன்களுக்காக பலியாக்கிவரும் அத்துலத்முத(லை)லி ''சீரழிந்த'' தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் தமிழர்களைத் தூண்டிவருவதாகவும் பத்திரிகைகளினால் ஆதரவளிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தென்கிழக்காசிய நாடுகளின் வரலாற்றிலேயே மிகப்பெரிய மோசடியொன்றைச்செய்து வருவதாகவும் அலறியுள்ளது.

## மண்டைதீவு வானொலி நிலையம் மூடப்பட்டது.

யூலை 21: ஆங்கிலச்செய்திகளை ஒலிபரப்புவதற்காக சிறீலங்கா அரசினால் மண்டைதீவிலுள்ள ஒலிபரப்புநிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட ட்ரான்ஸ்மீட்டர் கருவியானது யூலை 21ம் திகதியன்று தமிழீழமக்கள்விடுதலைக்கழகத்தினால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. இதைச்சாக்காக வைத்து சிறீலங்கா அரசாங்கம் மண்டைதீவு ஒலிபரப்புநிலையத்தையே மூடிவிட்டது. இதைவிட ரத்தலவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செய்திகளை அஞ்சல் செய்யும் மன்னாரிலுள்ள மீள்ஒலிபரப்பு நிலையத்தையும் சிறீலங்காஅரசு மூடிவிட்டது. இவ்விரண்டு நிலையத்தையும் மூடிய அரசாங்கம் இங்குள்ள கருவிகளைக் கொண்டு கொக்களவில் அஞ்சல் நிலையத்தை ஏற்படுத்தவுள்ளது.

## பகைவனின் இலக்குகளை தகர்க்க ஒன்றுபடுவோம்.

—**தோழர் பத்மநாபா அழைப்பு.**

யூலை 25 : ''ஈழ விடுதலைக்காகப் போராடும் இயக்கங்கள் பொதுவான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபடவேண்டும். எமது பகைவர்கள் தம்மைப் பலப்படுத்திவரும் இன்றைய கால கட்டத்தில் விடுதலை இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு பகைவனின் இலக்குகளை நோக்கி வியூகம் வகுக்க வேண்டும். இன்றைய வேளையில் நாம் ஒன்றுபடவில்லையானால் எமது மக்களுக்கு நாமே துரோகமிழைப்பு வர்கள் ஆவோம். நாம் தனித்து நிற்பது பகைவர்களுக்கு மட்டுமே சாதகமாக அமையும் என்பதை எண்ணிப் பார்த்து TELO, EROS, EPRLF ஆகிய அமைப்புகள் கட்டியமைத்துள்ள கூட்டமைப்பில் ஏனைய இயக்கங்களும் வந்து இணைய வேண்டும்''. ''இரத்த சூலை'' யில் பாசிஸ்டுக்களால் கொல்லப்பட்ட ஈழமக்களுக்கும் வெலிக்கடை முகாமில் படுகொலையான தமிழ்க்கைதிகள், ஈழப்புரட்சிவாதிகள் ஆகியோருக்கும் அஞ்சலி செலுத்தி வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) செயலாளர் நாயகமும், ஈழமக்கள் புரட்சிகர இராணுவ ஆணைக்குழுத் தலைவருமான தோழர் பத்மநாபா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## தமிழகமும் துயரத்தில் தோய்ந்தது.

யூலை 25 : கடந்த ஆண்டு இலங்கையில் (சிறீலங்கா + ஈழம்) நடந்த இனப்படுகொலையில் இறந்த ஈழமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யூலை 25ம் திகதி தமிழ்நாடு முழுவதும் துக்கதினமாகக் கொண்டாடப்பட்டது. அன்று தி. மு. கழகத்தினரும் ஆதரவாளர்களும் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர். எழும்பூர் பெரியார்திடலில் தி.மு.க வினால் 'கண்ணீர் நாள்' பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. சென்னையில் தமிழீழ மாணவர் பேரவையினர் உயிர்நீத்த ஈழமக்களுக்கு ஆதரவு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மௌன ஊர்வலம் நடத்தினார்கள். இதில் சென்னையிலுள்ள அனைத்துக்கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். அ. தி. மு. க. வினர் ஊர்வலமாகச் சென்று வடபழனியில் கூட்டம் நடத்தினர்.

## மீனம்பாக்கம் வெடிகுண்டு சம்பவம்: ஈழ விடுதலைக்கான கூட்டமைப்பு கண்டனம்!

சென்னை விமான நிலையத்தில் நிகழ்ந்த வெடிகுண்டு சம்பவத்தின் பின்னால் உள்ள சக்திகள் எதுவாக இருந்தாலும் எமது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறோம். இவ்வாறு ஈழவிடுதலைக்கான கூட்டமைப்பில் இணைந்துள்ள ஸ்தாபனங்களான தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மீனம்பாக்கத்தில் இறந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தி தமிழ்நாட்டில் சுவரொட்டிகளையும் ஒட்டியது.

படிப்பகம்

www.padippakam.com



## கூட்டமைப்புடன் இணையுமாறு கருணாநிதி வேண்டுகோள்.

யூலை 26, ஈழவிடுதலைக்காகப் போராடிவரும் விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட்டுப்போராடினால் தமிழ்நாட்டிலுள்ள 5 கோடி தமிழர்களின் ஆதரவு அவர்களுக்கு நிச்சயமாக உண்டு, என்று கலைஞர் கருணாநிதி சென்னையில் நடந்த ''கண்ணீர் நாள்'' கூட்டத்தில் தெரிவித்தார். எல்லா விடுதலை இயக்கங்களும் தமது குறிக்கோளாக ஈழம் பெறுவதைக்கொண்டிருப்பதனால் தாம் அவற்றை வேறுபடுத்திப்பார்க்கவில்லையென்றும் அதனால் அவர்கள் ஒற்றுமையுடன் ஒன்றாக நின்று போராடவேண்டும் என்றும் கூறினர். தற்போது தோழர் பத்மநாபா தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு, தோழர் சிறீசபாரட்னம் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கம் எனும் மூன்று முக்கிய இயக்கங்கள் முன்மாதிரியாக ஓரணியில் ஐக்கியமுன்னணியாகத்திரண்டிருக்கின்றன. ஏனைய இரண்டு முக்கிய அமைப்புக்களான தமிழீழமக்கள் விடுதலைக்கழகமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இவற்றோடு ஒன்று சேரவேண்டுமென்று அவர் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார். யார் விடுதலையைப்பெறுவது என்பதில் போட்டி இருந்தால்கூட வரவேற்கலாம். ஆனால் விடுதலை பெறும் நேரத்தில் இவன் உயிரோடு இருக்கலாமா என்று எண்ணுகின்ற அளவுக்கு வெறுப்புக்கள் வளர்வது தமக்கு குழப்பத்தைத்தருவதோடு தமிழ்நாட்டுமக்களின் ஆதரவையே இல்லாமல் செய்துவிடக்கூடும் என்றும் கவலை தெரிவித்தார். கருணாநிதி, தனக்கும் எம். ஜி. ஆருக்கும் உள்ள போட்டிகூட தமிழர்களுக்கு உதவுவதில் யார் முந்துவது என்பதே தவிர ஒருவர் வெற்றிபெறும்பட்சத்தில் மற்றவர் அவருக்கெதிராகச் செயற்படுவது அல்ல என்றும் கூறினார்.

## சிறீலங்கா கடற்படையால் அவதியுறும் தமிழக—ஈழ மீனவர்கள்

யூலை 26: அன்றாடம் மீன்பிடிக்கச் செல்லும் ஈழ மீனவர்களை சிறீலங்காக் கடற்படையினர் தமது கொலைகார ஆயுதங்களால் வெறிகொண்டு தாக்குவதும், மீன்களை பலாத்காரமாக பறித்தெடுப்பதும் வாடிக்கையாகிவிட்டது. மீன் கொள்ளையில் ருசிகண்ட சிறீலங்கா கடற்படையினர் தமிழக மீனவர்களிடம் தமது கைவரிசையைக்காட்ட ஆரம்பித்துள்ளனர். இலங்கையின் (சிறீலங்கா + ஈழம்) கடல் எல்லையைத் தாண்டிய இனவெறிப் படைகள் இராமேஸ்வரப்பகுதி மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக தெரியவருகிறது. இப்போது ஈழ மீனவர் மட்டுமன்றி தமிழக மீனவரும் தமது அன்றாட ஜீவியத்திற்கான தொழிலைச்செய்ய சிறீலங்கா கடற்படையால் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

## ஈழபபோராளிகளுக்கு மக்கள் அஞ்சலி - அர்த்தால் முழுவெற்றி!

யூலை 27: சென்ற ஆண்டு யூலை 25 ந் திகதி நடந்த இனப்படுகொலையில் உயிரிழந்த விடுதலைப் போராளிகளுக்கும் ஏனைய ஈழமக்களுக்கும் அஞ்சலிசெலுத்தும் வகையில் யூலை 25 இலிருந்து 27 வரை ஈழத்தில் நடைபெற்ற அர்த்தால் என்றுமில்லாதவகையில் வெற்றியளித்துள்ளது. தெருக்களில் நடமாட்டமே இருக்கவில்லை. கடைகள் மூடப்பட்டிருந்தன. அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை. நகரமே துயரத்தில் தோய்ந்திருந்தது. பாடசாலைகளுக்கு மாணவர்கள் யாருமே செல்லவில்லை. சில இடங்களில் குண்டுவீச்சு சம்பவங்களும் இடம்பெற்றது. யாழ் மாவட்டத்தில் சிறீலங்கா அரசு அலுவலகத்திலிருந்த, பாசிச வெறியர்கள் ஜே. ஆர். பிரேமதாசா ஆகியோரின் படங்களை இளைஞர்கள் தெருவில் போட்டு உடைத்தனர். மன்னார், வவுனியா பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்தின் நிர்ப்பந்தத்தினால் திறக்கப்பட்ட கடைகள் விடுதலைப்போராளிகளின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும பூட்டப்பட்டன.

## நோர்வே, சுவீடன், பின்லாந்து உதவிகள் மறுப்பு!

ஆகஸ்ட் 2: சிறீலங்காவிற்கான உதவியை தீர்மானிப்பதற்கும் சிறீலங்காவில் ஜனநாயக படிமுறைகளையும் மனித உரிமைகள் பற்றிய நிலைகளையும் அவதானிக்கவென்று நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளின் குழுவொன்று இலங்கைக்கு (சிறீலங்கா + ஈழம்) விஜயம் செய்துள்ளது. அக்குழு நிலைமைகளை விரிவாகவும் முழுக் கவனத்துடனும் ஆராய்ந்தபின் பாசிச அரசின் நடத்தைகளினால் தாம் மிகவும் அதிருப்தி அடைந்திருப்பதாகவும் அதனுல் தமது அரசாங்கங்கள் செய்யவிருந்த உதவியை ''ஜனநாயகம்'' மீண்டும் தழைக்கு மட்டும் நிறுத்திவைக்கச் சொல்லியிருப்பதாகவும் கூறியுள்ளது.

## பகைவனின் முகாம்களில் மரண ஒலங்கள்!

ஆகஸ்டு 3: கடைசியாகக் கிடைத்த இரகசியத்தகவல்கள் சிறீலங்கா சிறைகள் ஈழப்போராளிகளின் சிதைகளாவதை உறுதிப்படுத்துகின்றது. கைது செய்யப்படுபவர்கள் உட்காயங்கள் மட்டும் பலமாக

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படும்படி குண்டாந்தடிகளாலும் இரும்புக்கம்பிகளாலும் துப்பாக்கிப்பிடிகளாலும் தாக்கப்படுகின்றார்கள். உணவோடு மெதுவாக ஆட்களைக்கொல்லும் விசங்கள் அல்லது உடலை உருக்குலையச் செய்யும் இரசாயனப் பொருட்கள் பளிங்குருவில் கலந்துகொடுக்கப்படுகின்றன. சித்திரவதைகளினால் மயங்குபவர்களுக்கும் களைப் படைந்தவர்களுக்கும் கொடிய இரசாயனப்பொருட்கள், கலந்த நீர் பருகக்கொடுக்கப்படுகின்றது. இவற்றை உண்ணவோ, குடிக்கவோ மறுப்பவர்களுக்கு உண்டு குடிக்கும்வரை சித்திரவதை நடைபெறுகிறது. நச்சுத் தன்மைவாய்ந்த இந்த இரசாயனப்பொருட்கள் அவற்றின் அளவுக்கேற்ப 2 மாதத்திலிருந்து 2 வருட கால எல்லைக்குள் ஆட்களைக் கொல்லும் சக்திபடைத்தவை. மிகக்கேவலமான முறையில் சித்திரவதைக்குட்பட்ட பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் முகாம்களில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட குழிகளுக்குள் இடப் பட்டு எரிக்கப்படுகின்றனர். இவர்களை எரிப்பதற்கு பழைய ரயர்கள் கொழும்பிலிருந்தும் காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்தும் எடுத்துவரப்பட்டு இராணுவ முகாம்களில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

## சிறீலங்கா கடற்படை மீது தாக்குதல்.

ஆகஸ்ட் 4 : ஈழத்தில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வல்வட்டித்துறையில் பொலிகண்டி கிராமத்தில் சிறீலங்கா கடற்படைக்கும், ஆயுதம் தாங்கிய இளைஞர் குழு ஒன்றுக்கும் மோதல் ஏற்பட்டது. கடற்கரையில் காணப்பட்ட படகுகளை சிறீலங்கா கடற்படையினர் கைப்பற்ற முற்பட்ட போது தாம் தாக்கியதாக இச்சம்பவத்தில் ஈடுபட்ட இயக்கம் கூறுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கமே இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிகிறது. இத்தாக்குதலில் ஆறு சிறீலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

## 16—35 வயதுடையவர்கள் வதைமுகாம்களில் !

ஆகஸ்ட் 5: ஞாயிற்றுக்கிழமை சிறீலங்கா இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலால் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயசுந்தரா கொல்லப்பட்டார். 10க்கு மேற் பட்ட கூலிப்படையினரும் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின் மீண்டும் விடுதலைப் புலிகள் சிறீலங்கா இராணுவத்தின் கவச வண்டி மீது தாக்குதல் நடத்தினர். இதில் கவச வண்டி கவிழ்க்கப்பட்டது.

இதனால் சிறீலங்கா கூலிப்பட்டாளம் லாரிகளில் வந்து குதித்து வீதிகளில் சென்ற மக்களை சுட்டுவீழ்த்தியது. வீடுகளுள் புகுந்து கொலை வேட்டை நடத்தியது. இதனால் யாழ் குடாநாடே பரபரப்பு அடைந்தது. மக்கள் வீடுகளுக்குள் பாதுகாப்பற்ற நிலையில் அடைந்து கிடந்தனர். மீண்டும் அங்கங்கே ஏற்பட்ட சில குண்டு வெடிப்புகளால் அச்சமடைந்த சிறீலங்கா கொலைப்பட்டாளம் கண்மூடித்தனமாக 200 க்கு மேற்பட்ட மக்களை படுகொலை செய்தது.

ஈழ மக்களில் 16—35 வயதுடையவர்கள் ஆகஸ்ட் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதிக்கிடையில் 1000க்கு மேற்பட்டோர் கூலிப்படையால் வதைமுகாம்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஆகஸ்ட் 6ஆம் திகதி சுன்னாகத்தில் மீண்டும் ஏற்பட்ட குண்டு வெடிப்பால் மேலும் ஈழத்தில் பதட்டம் நிலவியுள்ளது.

ஈழ மக்கள் தம்மை பாதுகாக்க தக்க பாதுகாப்பு வசதிகள் உடன் வழங்கிட வேண்டியதும், இதன் மூலம் மக்களையும் போராட்டத்தில் இணைத்துக்கொள்வதும் முக்கியமானது. இல்லையெனில் இயக்கங்கள் மட்டும் தனித்து நின்று கொடிய கொலைக் கும்பலிடமிருந்து மக்களை காக்க முடியாது.

## சொந்த நாட்டில் அகதிகளாகும் மக்கள்!

ஆகஸ்ட் 6 : தாக்குதல் சம்பவங்களுக்கு பழிதீர்க்கும் வகையில் வல்வெட்டித்துறை கரையோரங்களில் வாழ்ந்த 1500 குடும்பங்களுக்கும் மேற்பட்ட 6000 பேர் சிறீலங்கா இராணுவத்தினரால் அவர்களின் வீடுகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். வீடுவாசல்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. வீடுவாசல்களை இழந்த அப்பகுதிமக்கள் கோயில்களிலும் பாடசாலைகளிலும் ஒதுங்கியுள்ளனர். யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள பலவீடுகளும் இராணுவகவச வண்டிகளினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



## பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி கண்டனம்

சிறீலங்கா நவபாசிச அரசு இஸ்ரேல் சியோனிசத்துடன் கொண்டுள்ள தொடர்பு பாலஸ்தீனமக்களுக்கு எதிரானது என பல அரபுநாடுகள் உணர்ந்து வருகின்றன. பாலஸ்தீன விடுதலை இயக்கங்களில் பலம் வாய்ந்த ஒன்றான பாலஸ்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜோர்ஜ் கபாஸ் சிறீலங்கா அரசை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

## ஈழம் எரிகையில் பிடில் வாசிக்கும் நியூயோர்க் டாக்டர்.

நியூயோர்க்கில் நடந்த ''சர்வதேசத்தமிழர் மாநாடு'' டாக்டர் வின்ஸ்டன் பஞ்சாட்சரத்திற்கும் அவரது வளர்ப்புப் பிள்ளைகளுக்கும் போதியளவு பிரசித்தியைக் கொடுத்ததுடன் முடிவடைந்துள்ளது. இரத்த வெள்ளத்தில் மிதக்கும் ஈழத்தில், ஈழமக்கள் மரணபயத்துடன் வாழ்ந்துவருகையில் இவ்வித ஆடம்பர மாநாடும் அரட்டைக் கச்சேரிகளும் அவசியம்தானா? ஈழம் எரிகையில் பிடில் வாசித்திருக்கிறார் பஞ்சாட்சரம். இக்களியாட்டவிழாவில் கரியாக்கப்பட்ட பணத்தை ஈழவிடுதலை இயக்கங்களின் வளர்ச்சிக்காக செலவழித்தி ருந்தாலும் பரவாயில்லை. ஈழ இளைஞர்கள் செய்யும் மகத்தான தியாகங்களை அமெரிக்கத்தமிழர்கள் சிறுமைப்படுத்தாதிருக்க வேண்டும். அரசியல் அரிச்சுவடி கூடத் தெரியாதவர்கள் கசாப்புக்கடைக்காரன் ஆபரேஷன் செய்ய வெளிக்கிட்டதுபோல் அரசியலமைப்பொன்றை உருவாக்கியிருக்கின்றனர். அங்குள்ளோர் அனைவரும் டாக்டரின் குரலினூடாகவும் கிராமபோன் தட்டினூடாகவும் ஈழத்தை அடைந்துவிடலாமென்று மயக்கத்தில் கிடக்கின்றார்கள். ஆனால் டாக்டரின் பின்னாலுள்ள சக்திகள்பற்றி பலருக்குத் தெரியாதுதான்.

## பிரிட்டிஷ் உளவுப்படையின் உதவி.

ஈழவிடுதலைப் போராளிகளை ஒழிக்க வகைதேடி உலகை வலம்வரும் அத்துலத்முதலி விடுதலைப் போராளிகள் எவ்வாறு சர்வதேச எல்லைகளைக் கடந்து ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் பெறுகின் றார்கள் என்பதுபற்றி அறிய பிரித்தானியாவிலுள்ள ''ஸ்கொட்லன்ட்யாட்'' சர்வதேச துப்பறியும் பிரிவினரின் உதவியை நாடியுள்ளான். உளவுத் தகவல்களைப் பரிமாறுவதில் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொள்ள அவர்களும் ஒத்துக்கொண்டுள்ளதாத் தெரிகிறது.

## ஈழமக்கள் படுகொலைக்கு அமெரிக்காவே பொறுப்பு.

இலங்கையில் (ஈழம்+சிறீலங்கா) நிலவும் பத்திரிக்கைத் தணிக்கைகாரணமாக செய்திகள் வெளியில் வராவிட்டாலும் ஈழமக்களுகெதிரான அநியாயங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் ஆயுத, பண உதவி வழங்கிவரும் அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் என்று தி. மு. க. உறுப்பினர் வை. கோபால்சாமி இந்திய ராஜ்யசபாவில் கூறியுள்ளார். ஈழத்தில் அப்பாவித்தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதும் கொள்ளையடிக்கப்படுவதும் கேட்பாரின்றித் தொடர்கின்றது. ஆகவே இந்திய அரசு பொருத்தமான சர்வதேச அரங்குகளில் இப்பிரச்சனையை எடுத்துக் கூறவேண்டுமென்று சிறீலங்காவிற்கு செய்யும் உதவிகளுக் காக அமெரிக்க அரசாங்கத்தை கடுமையாகக் கண்டிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

## வவுனியாவிலும் வன்முறைகள்

ஆகஸ்ட் 8: சிறீலங்கா கூலிப்படையினரால் வவுனியாவில் தமிழரின் கடைகள் தரைமட்டமாக்கப் பட்டன. ஓட்டல் ஒன்றின் உரிமையாளருட்பட ஆறுபேர் சுடப்பட்டு மாண்டுள்ளனர். அத்துடன் மாஜீ வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் சிற்றம்பலத்தின் வீடும் சட்டத்தரணி கேதீஸ்வரனின் வீடும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

## 17 ஈழ மக்கள் துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் சென்னை ஆஸ்பத்திரியில்.

அகஸ்ட் 8: சிறீலங்கா இராணுவ வெறிநாய்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 17 ஈழத்தவர் தமிழ் நாட்டுக்கு தப்பி வந்துள்ளனர். தற்போது இவர்கள் சென்னை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சையளிக்கப்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



## மோட்டார் வண்டியில் சென்ற இளைஞர்கள் பலி

ஆகஸ்ட் 9: ஆகஸ்ட் 9 அன்று மாலை மோட்டார் சைக்கிளொன்றில் பயணம் செய்துகொண்டிருந்த இரு இளைஞர்கள் சிறீலங்கா இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் அவர்கள் பிரயாணம் செய்த மோட்டார்சைக்கிளும் எரிக்கப்பட்டது.

## கொலைஞர்கள் இறக்குமதி

ஆகஸ்ட் 9: இஸ்ரேலிய கொலைஞரினால் கொரில்லா எதிர்ப்பு யுத்தத்தில் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டாயிரம் சிங்கள இராணுவ வெறியர்கள் ஈழ மக்களை அழிக்கவென்று சிறிலங்கா அரசினால் ஈழத்திற்கு மேலதிகமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## ஏகாதிபத்தியத்தின் யுத்தக்கப்பல் சிறீலங்காவில்

ஈழம் இரத்தவெள்ளத்தில் மூழ்கியிருக்கையில், மூழ்கவைத்தவர்களுக்குத் துணையாக, அமெரிக்காவின் 35 ஆவது நீர்மூழ்கி எதிர்ப்புக்கப்பலைச் சேர்ந்த யூ. எஸ். புறூட்டன் எனும் எதிர்ப்பு போர்முறைக் கருவிகளைக் கொண்ட கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. ஏகாதிபத்திய அமெரிக்காவின் இந்த நடவடிக்கை இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் பதட்டத்தை அதிகரிக்கச்செய்வதாகும். இலங்கையில் இன்று நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலையை மேலும் தூண்டிவிட்டு தனது கடற்படையை நிரந்தரமாக நிறுத்திவைக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் விரும்புறது. இந்துமகாசமுத்திரப் பிராந்தியத்தை சமாதான வலயமாக்கும் திட்டத்தை ஏகாதிபத்திய அமெரிக்கா எப்போதும் விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

## பொலிஸ் காவலிலிருந்த தமிழ் இளைஞர்கள் குண்டுவெடித்து மரணம்

ஆகஸ்ட் 11: ஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் சிலர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். சுன்னாகம் பொலிஸ்நிலையம் தமிழ்த்தீவிர வாதிகளினால் தாக்கப்பட்டதையடுத்து அதை தற்காலிகமாக மூடிவிட சிறீலங்கா அரசு தீர்மானித்தது. இதன் பிரகாரம் பொலிஸ் நிலையத்தை மூடிவிட்டுச் சொல்லுமுன் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களுக்கு கைவிலங்கு பூட்டி வாயை மூடிக்கட்டி விட்டு அவர்கள் இருந்த அறையினுள் வெடிகுண்டு (Time Bomb) வைத்து விட்டுச் சென்றனர். சில மணி நேரத்தின் பின்னர் குண்டு வெடித்ததையடுத்து தடுத்துவைக்கப்பட்டிருந்த30இளைஞர்கள் உயிரிழந்தனர். கட்டடத்தினுள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் பொதுமக்களின் உதவியினால் வெளியே எடுக்கப்பட்டது.

## மன்னாரில் சிறீலங்கா இராணுவத்தின் அட்டகாசம்

ஆகஸ்ட் 11: 11.8.84 அன்று முளங்காவிலில் சிறீலங்கா இராணுவத்தினரின் ட்ரக்வண்டி மீது தமிழ் இளைஞர்கள் குண்டுவீசித் தாக்கினார்கள். இத்தாக்குதலின்போது 6 சிறீலங்கா இராணுவத்தினர் உயிர் இழந்ததுடன் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இத்தாக்குதலையடுத்து கொலைவெறி பிடித்த சிங்கள இராணுவத்தினர், மன்னாரின் பல பகுதிகளில் தமது வெறியாட்டத்தைத் தொடங்கினர். மன்னாரிற்கு அண்மையிலுள்ள அடம்பன் என்னும் கிராமத்திலுள்ள மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். இதனல் பீதியடைந்த அப்பாவி மக்கள் கிராமத்தைவிட்டு சிதறியோடினர். இராணுவத்தின் இந்த நடவடிக்கையினால் 3000 குடும்பங்கள் வீடிழந்து நடுத்தெருவில் நிற்கின்றன. மன்னார் நகரில் நடந்த தாக்குதலின்போது இரண்டு, மூன்று கடைகளைத்தவிர அனைத்துமே எரித்து தரைமட்டமாக்கப்பட்டது. படையெடுப்பு நடத்தும் சிங்கள இராணுவத்தினர் கையில் கிடைத்ததையெல்லாம் அடித்து உடைத்து நாசப்படுத்தியதாக தோமஸ் எனும் கத்தோலிக்க பாதிரியார் கூறினார்.

## "ஈழத்தமிழர் பிரச்சினையில் திருப்பம்" எம். ஜி. ஆர்.

ஆக. 15: ஈழத்தமிழர் பிரச்சினையில் இதுவரை இந்தியா கடைப்பிடித்துவந்த நிலைவேறு; இனி கடைப்பிடிக்கும் நிலை வேருக இருக்குமென்று எதிர்பார்ப்பதாக தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். இந்திய சுதந்திரதினத்தன்று கொடி ஏற்றிவைத்துப் பேசும் போது கூறினர். வழக்கமாக சுதந்திர தினத்தன்று

படிப்பகம்

www.padippakam.com



கொடியேற்றிவைத்து பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் முதல்வர் இம்முறை அணிவகுப்பு மரியாதையை ஏற்கவில்லை. இதுபற்றிப்பேசுகையில் ஈழத்தில் நமது தமிழ்மக்கள் படும் துன்பத்தைக் கண்டு எவ்வளவு வேதனைப்படுகிறேம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் இந்த அணிவகுப்பு நிகழ்ச்சி இல்லை. நாம் பெற்ற சுதந்திரத்தை காப்பாற்றுவதன் மூலம் மற்றவர்களுக்கும் சுதந்திரம் வாங்கித்தரு வோம்'' என்ருர்

## ''ஈழத்தமிழர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுகிருர்கள்''- இந்திரா

ஆக 15: ஈழத்தமிழர்கள் கண்மூடித்தனமாக தாக்கப்படுவதற்கும் குறிப்பாக அப்பாவி மக்கள் படுகொலைசெய்யப்பட்டு வருவதற்கும் இந்தியாவின் ஆழ்ந்த வருத்தத்தை பிரதமர் இத்திரா வெளியிட்டார். ஈழத்தில் தொடர்ந்து நடைபெறும் வன்முறைகாரணமாக அங்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவது குறித்து கவலை தெரிவித்த பிரதமர் இந்திரா ஈழத்தமிழர் பிரச்சினையில் நியாயமான சமூக தீர்வு ஒன்றை காண்பதற்கான நடவடிக்கைகளை ஜெயவர்த்தனு தீவிரப்படுத்த வேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார். மேலும் அவர் கூறியதாவது: ஈழத்தில் தமிழர் பிரச்சினையில் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பத்தினருக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களிற்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவிக்கின்றேன். தமிழ் நாட்டில் அடைக்கலம் புகுந்திருக்கும் கணக்கற்ற அகதிகளில் உளவாளிகளும் வந்திருக்கிருர்கள். இதனால் இந்தியாவுக்குத்தான் பெரும் பிரச்சனை, சிக்கல் ஏற்பட்டு இருக்கின்றது என்றும இந்தியப் பிரதமர் தனது செய்தியில் கூறியுள்ளார்.

## ''யாழ்ப்பாணம் சுடுகாடுபோல் காட்சி அளிக்கிறது''

ஆகஸ்ட் 15: ''தமிழர்கள் வாழும் யாழ்ப்பாண நகரம் சுடுகாடுபோல் காட்சியளிக்கின்றது. தீவிர வாதிகளை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவித்தமிழர்கள் மீது வெறித்தனமான தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தினர் இறங்கியுள்ளனர். யாழ்ப்பாண நகரத்தின் குறுக்குத்தெருக்களும் வீதிகளும் காலியாக உள்ளன. இரத்தவெறி பிடித்த சிறீலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுவிடுவார்கள் என்ற அச்சம் மக்களிடையே நிலவுகின்றது. வீட்டுக்குள்ளும் காடுகளிலும் ஒளிந்து இருக்கிறார்கள்.'' மேற்கண்டவாறு அமெரிக்க பத்திரிகையான ''வாஷிங்டன் போஸ்ட்'' நிருபர் வில்லியம் கூறிஞர். இவர் வேறுசில வெளி நாட்டு நிருபர்களுடன் யாழ்ப்பாண நகரத்தை சுற்றிப்பார்த்தார்.

## கொலை வெறியனின் கொடும்பாவி எரிப்பு!

ஆகஸ்ட் 15: ஈழத்தில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மாணவர்கள் ஊர்வலம் நடத்தியதோடு ஜே ஆரின கொடும்பாவியை எரித்தனர்.

தென்ஆற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் நானூறு மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று வட்டார வளர்ச்சித்துறை அலுவலரிடம் (R.D.O) மனுவொன்றை சமர்ப்பித்தனர். பின்னர் ஜெயவர்த்த னாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

வானூரில் நடந்த ஊர்வலத்தினபோது 100 பெண்கள் உட்பட ஆயிரம்பேர் கலந்துகொண்டனர். ஜே. ஆரின் படம் எரித்து சாம்பராக்கப்பட்டது.

## ஈழ மாணவர் பொதுமன்ற பேரணி நிறுத்தப்பட்டது.

சர்வதேசத்தில் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஏகாதிபத்திய அமெரிக்க கொள்ளைக் கார கும்பலையும், அதன் யுத்தவெறிக்கு துணைபோகும் ஏவல்நாய்களையும் கண்டித்தும், ஈழத்தில் மனித வேட்டை நடத்தும சிறீலங்கா கொலை பாதக அரசை கண்டித்தும் ஈழ மாணவர் பொதுமன்றம் (G.U.E.S) சென்னையில் கண்டன பேரணி ஒன்றை ஆகஸ்ட் 13-இல் நடத்த இருந்தது. ஆனால் சென்னையில் அனைத்துக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடைபெற்றதால் ஈழ மாணவர் பொது மன்றம் தனது பேரணியை ஒத்திவைத்ததாக அறிவித்தது.

## இந்திய கம்யுனிஸ்ட் கட்சி கண்டன ஊர்வலம்
## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் பங்கேற்பு

அகஸ்ட் 16: இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்டக் குழு ஈழ மக்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியது. சென்னை மாவட்டக் குழுத் தலைவர்

www.padippakam.com



தோழர் பழனிச்சாமி தலைமையில் சென்னை பெரியார் பாலத்தில் இருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி ஏகாதிபத்திய அமெரிக்காவின் சென்னை தூதரகத்தில் முடிவடைந்தது. இக்கண்டனப் பேரணியில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொதுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியானதும், அதன் ஏவல் நாய்களதும் யுத்த வெறியை கண்டித்தும், ஈழ மக்களுக்கு எதிரான சிறீலங்கா இனவெறியாட்சியின் யடுகொலை நடவடிக்கையை கண்டித்தும், சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளது ஐக்கியத்தை வலியுறுத்தியும் கோசங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது.

## காலியிலுள்ள வதைமுகாம்களில் 3500 ஈழ இளைஞர்கள்

அகஸ்ட் 17 : சிறீலங்கா கொலைவெறி இராணுவத்தினால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட 3500 ஈழ இளைஞர்கள் சிறீலங்காவிலுள்ள காலி மாவட்டத்தைச் சேர்ந்த பூசா, அத்துகல, கட்டுபெத்து ஆகிய இடங்களிலுள்ள இராணுவ வதைமுகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்த இளைஞர்களில் இதுவரை பலர் வதையின் பின் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கிறோம்.

## சிறீலங்கா ஆயுதப்பண்டகசாலையாகிறது

ஆக 17 : ஈழமக்களின் புரட்சிகர விடுதலைப்போராட்டத்தை ஒழித்துக்கட்டும் முயற்சியில் இறங்கியுள்ள சிறீலங்கா பாசிச அரசு வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை வாங்கிக்குவிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது. அண்மையில் கிறீலங்கா அரசு ஆயுதங்கள் வாங்கிய கம்பெனிகளின் பெயர்கள் பின்வருமாறு:

(1) சிமித் அன் கொம்பனி (அமெரிக்கா)
(2) யோனாஸ் ஆம்ஸ் அன்ட் விமானக்கம்பனி (அமெரிக்கா)
(3) கெக்லர் அன்ட் கொக் (மேற்கு ஜேர்மனி)
(4) பைரூடெக்னிக் pyrutecknic( ,, )
(5) கோல்ட் (அமெரிக்கா)

கோல்ட் என்னும் அமெரிக்கக்கொம்பனியிடமிருந்து ஆயிரம் 5.56 M.M. காபைன் (carbine) வாங்கப்பட்டுள்ளது

## இனப்படுகொலையை இந்தியா கண்டிக்கிறது. ஏகாதிபத்திய வாதிகளுக்கு இந்தியா கடிதம்

அகஸ்ட் 19 : சிறீலங்கா சிங்கள பேரினவாத அரசு சர்வதேச பயங்கரவாதக் கும்பல்களுடன் இணைந்து ஈழ மக்களை படுகொலை செய்துவருவதைக் கண்டித்து, இது விடயத்தில் தமிழக மக்களிடம் ஏற்பட்டு வரும் கொந்தளிப்பான நிலையினை சுட்டிக்காட்டியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தியத்திற்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இந்தியா கடிதம் எழுதியுள்ளது. ஈழ மக்கள் படுகொலை செய்யப்படுவதை இந்தியா பார்த்துக்கொண்டிருக்க முடியாது என இக்கடிதத்தில் இந்தியப் பிரதமர் கூறியிருப்பதாக தெரிகிறது இது தவிர ஈழ மக்கள் மீது சிறீலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ள இராணுவ மேலாதிக்கத்தனத்தையும், இலங்கையில் (சிறீலங்கா + ஈழம்) இன்றுள்ள கொந்தளிப்பான நிலையையும் உலகெங்குமுள்ள இந்தியத் தூதர்கள் ஊடாக அந்தந்த நாட்டின் அரசுகளுக்கு இந்தியா விளக்கி வருகிறது. இலங்கையை ஆதிக்க நோக்கங்களுக்கு பயன்படுத்தும் "நேட்டோ" நாடுகளான அமெரிக்காவுக்கும், பிரிட்டிஷ்க்கும் இந்திரா இலங்கை சம்பந்தமான இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கி கடிதம் எழுதியிருப்பது முக்கியமான தொன்றாக கருதப்படுகிறது. உலக சோசலிச நாடுகளையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் குழிபறிக்கவும், **அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட "நேட்டோ"** கூட்டமைப்பானது சர்வதேசத்தில் பதற்றத்தை ஏற்படுத்திவருகிறது. உலக சமாதானத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

தற்போது இலங்கையில் உள்ள சிறீலங்கா பாசிச அரசுக்கு "நேட்டோ" நாட்டின் தலைவனான அமெரிக்காவும், பிரிட்டிஷ் கும்பலும் இவற்றின் கொலைகார மேலாதிக்க கூட்டாளிகளும் பக்கபலமாக இருக்கின்றனர், இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் திருமதி இந்திராகாந்தி அனுப்பியுள்ள கடிதம் முக்கியமானதொன்றேயாகும்.

www.padippakam.com

**தனிச் சுற்றுக்கு மட்டும்**

## 4000 கொலைப் பட்டாளத்தை ஏகாதிபத்தியங்கள் தயாரிக்கின்றன.

ஆகஸ்ட் 20: சிறீலங்கா நவபாசிச அரசுக்கு பின்பலம் கொடுக்க ஓடோடி வந்துள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கூலிப்படையான விசேச விமான சேவை (S.A.S) கும்பல் சிறீலங்காவில் இனவெறி யூட்டப்பட்டு திரட்டப்பட்ட 4000 சிங்கள வாலிபர்களுக்கு இராணுவ பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறது. இந்த கொலை வெறியரில் 500 பேர் ஏற்கனவே பயிற்சியை முடித்துக் கொண்டுவிட்டனர். இப்போது இந்த 500 கொலை வெறியூட்டப்பட்ட கும்பல் ஈழத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் வேலை இல்லாத்திண்டாட்டம், வறுமை என்பன ஏற்பட்டுள்ள நிலையில் இதிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள தீவிர பேரினவாதத்தை ஊட்டி ஈழ மக்களுக்கு எதிரான அழித்தொழிப்பு யுத்தத்திற்கு சிங்கள வாலிபர்களை சிறீலங்கா பாசிஸ்டுக்கள் திரட்டி வருகிறார்கள்.

---

கீழ்க்காணும் வெளியீடுகளைப் பெறவிரும்புவோர்
எம்முடன் தொடர்பு கொள்க!

---

ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியினால் வெளியிடப்படும் பிரச்சார ஏடு
மாதம் ஒரு முறை — **செந்தணல்**

ஈழ தேசத்தினதும், சர்வதேசப் பெண்களதும் புரட்சிகர அனுபவங்களை தாங்கி வரும் ஏடு

---

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தத்துவ, இலக்கிய ஏடு
— **ஈழமுழக்கம்** (மாதம் ஒரு முறை)

புரட்சிகர கவிதைகள், முற்போக்கு ஆக்கங்களைச் சுமந்து வருகிறது

---

**"முதலாவது காங்கிரஸ் தலைமை உரை"**

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதலாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் **க. பத்மநாபா** அவர்கள் ஆற்றிய தலைமை உரை. EPRLF இன் கடந்தகால, எதிர்காலச் செயற்பாடுகள் பற்றி அறிய விரும்பும் அனைவரும் படித்தறிய வேண்டியது.

---

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!



PRINTED MATTER

EPIC
Post Bag: 5551
MADRAS-600 094

Mr. Kanagasaba.
25, Rue De 'L' ARCG.
75019, PARIS, FRANCE

படிப்பகம்